செ.வெ.எண்: 238 நாள்: 05/04/2011

## செய்தி வெளியீடு

**பொதுத் தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு 13.04.2011 அன்று தொழில் / வர்த்தக நிறுவனங்கள் மற்றும் கடைகளில் பணிபுரிவோருக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை**

------

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சட்டமன்ற பேரவைகளுக்கும் பொதுத்தேர்தல் 13.04.2011 அன்று நடைபெறுவதாக இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

1951-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள பிரிவு 135பி-ன்படி அனைத்து தொழில் நிறுவனங்கள் / வர்த்தக மற்றும் கடைகள் நிறுவனங்கள் உள்ளிட்டவற்றில் பணிபுரியும் வாக்களிக்கத் தகுதியான ஒவ்வொருவருக்கும் சட்டமன்றத் தேர்தலில் வாக்களிக்க சம்பளத்துடன் கூடிய ஒரு நாள் விடுமுறை அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், இவ்வாறு தேர்தலை முன்னிட்டு விடுமுறை அளிக்கப்படும் நாளுக்குரிய சம்பளம் குறைக்கப்படவோ அல்லது பிடித்தம் செய்யப்படக்கூடாது எனவும் இப்பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது.

1951-ம் ஆண்டு மக்கள் பிரதிநித்துவச் சட்டப்பிரிவு 135பி-ன்படி அனைத்துக் கடைகள் மற்றும் நிறுவனங்கள், பொதுத்தேர்தல் நடைபெறும் தினத்தன்று மூடப்படவேண்டும், என தேர்தல் ஆணையம் அவற்றின் கடிதம் எண். 78/2011 /இ.பி.எஸ் நாள்:26.03.2011-ல் தெரிவித்துள்ளது.

மேலும் ஒரு தொகுதியில் வாக்காளராக பதிவு பெற்ற தொழிலாளர்கள் மற்றும் தினக்கூலி தொழிலாளர்கள் உட்பட அனைத்து தொழிலாளர்களும் பொதுத்தேர்தல் நடைபெறும் தொகுதிக்கு வெளியே அமைந்துள்ள தொழில் நிறுவனங்கள் / வர்த்தக மற்றும் கடைகள் நிறுவனங்கள் உள்ளிட்டவற்றில் பணிபுரிந்தாலும், 1951-ம் ஆண்டு மக்கள் பிரதிநித்துவ சட்டப்பிரிவு 135 பி (1)-ன்படி சம்பளத்துடன் கூடிய விடுப்பினைத் துய்க்க, தகுதியுடையவர் எனவும் தேர்தல் ஆணையம் விளக்கம் அளித்துள்ளது.

தேர்தல் ஆணையத்தின் கடிதத்தில், 1951-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்பிரிவு 135 பி-ன்படி தற்காலிக மற்றும் தினக்கூலி பெறும் தொழிலாளர்களும், தேர்தல் நாளன்று சம்பளத்துடன் கூடிய விடுமுறை பெற தகுதி உடையவர்கள் ஆவர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

1951-ம் வருட மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்பிரிவு 135பி-ல் வரையறுக்கப்பட்டுள்ளபடியும், மேற்குறிப்பிட்ட தேர்தல் ஆணையத்தின் கடிதங்களின் அடிப்படையிலும், தங்களிடம் பணிபுரியும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் 13.04.2011 அன்று சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளிக்க வேண்டும் என்பது தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு வேலையளிப்பவரின் கடமையாகும். எனவே, அனைத்துத் தொழிற்சாலைகள், கடைகள், நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள், தோட்ட நிறுவனங்கள், பீடித் தொழில் நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் ஆகியவற்றின் உரிமையாளர்கள், தங்கள் நிறுவனத்தில் பணிபுரியும் தற்காலிக / தினக்கூலி பெறும் தொழிலாளர்கள் உட்பட அனைத்து தொழிலாளர்களுக்கும் 13.04.2011 அன்று சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்குமாறு அரசு கேட்டுக்கொள்கின்றது.

(கையொப்பம்) 5/4/11
முதன்மை செயலாளர் மற்றும்
தொழிலாளர் ஆணையருக்காக.

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9